முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2015 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

01-08-2015
முற்பகல்
[9.00 – 12.00]

பக்கங்கள் : 12
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**
  - (1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்.*
  - (2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளி ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | எல்லா வினாக்களும் கட்டாயமானவை | 20 |
| B | எல்லா வினாக்களும் கட்டாயமானவை | 30 |
| C | மூன்று வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக | 50 |
| மொத்தப் புள்ளிகள் | | 100 |

  - (3) ***விடைகள்*** *யாவும் உமக்குத் தரப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***ஒரு மொழியிலே*** *எழுதப்பட வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் தருக. ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் கூறுக.*
  - (5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு செயல் வினைச் சொல் உள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்டுள்ள வினைச் சொற்களின் பொருள் வரையறையின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**1.1** நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச் சட்டகம் சில விடயங்களைக் கையாள்கிறது.

(a) அது கையாளும் மூன்று (03) விடயங்களை நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

(b) “பொதுத் தேவை நிதிக் கூற்றுக்கள்” என்பதன் கருத்தினைக் கூறுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

**1.2** புதிதாக உருவாக்கப்பட்ட உற்பத்திக் கம்பனியான **ABC Ltd.** அதன் தொழிற்பாட்டினை 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பித்தது. 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனிக் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன.

| | **ரூ.** |
|---|---|
| நுகரப்பட்ட மூலப்பொருட் கிரயம் | 500,000 |
| மொத்த நேர் கூலிக் கிரயம் | 550,000 |
| ஏனைய மாறும் உற்பத்திக் கிரயம் | 380,000 |
| ஆண்டிற்கான நிலையான உற்பத்தி மேந்தலை | 260,000 |
| சோம்பல் கூலிக் கிரயம் (எதிர்பார்க்காத வேலைத் தடை காரணமாக) (மொத்த நேர் கூலிக் கிரயத்தில் உட்படுத்தப்பட்டது) | 20,000 |
| நிருவாக மேந்தலைகள் | 240,000 |

| | **அலகுகள்** |
|---|---|
| உற்பத்தி வசதியின் சாதாரணமான இயல்வலு | 40,000 |
| ஆண்டின்போது உண்மை உற்பத்தி | 32,000 |
| ஆண்டின்போது விற்பனை செய்யப்பட்ட அலகுகள் | 28,000 |

கம்பனி ஒரு தனிப் பொருளை உற்பத்தி செய்வதாகக் கொள்க.

2015 மார்ச் 31 ஆந் திகதி இருப்பிலுள்ள முடிவடைந்த பொருட்களின் பெறுமதியை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் தகவல்கள் **சிக்மா கம்பனி** சம்பந்தப்பட்டவையாகும்.

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி **சிக்மா கம்பனியின்** வியாபார வருமதிகள் மீதி **ஒமேகா** விடமிருந்து வருமதியாக இருந்த ரூ. 28,000/- இனை உள்ளடக்கியிருந்தது. 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி **ஒமேகா** வங்குரோத்து நிலை அடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டார்.

(b) பாதுகாப்புத் தொப்பிகள் கிடைக்காத காரணத்தினால் வேலை நேரத்தின்போது தலையில் ஏற்பட்ட காயத்திற்காக **சிக்மா கம்பனியின்** ஊழியரொருவர் ரூ.100,000 நட்டஈடு கோரி வழக்கொன்றினை 2015 மார்ச் 20 ஆந் திகதி தாக்கல் செய்தார். 2015 மே 31 ஆந் திகதி அந்த ஊழியருக்கு நட்டஈடாக ரூ.100,000 செலுத்துமாறு நீதிமன்றம் கம்பனிக்கு உத்தரவிட்டது.

(சிக்மா கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வழங்கலுக்காக 2015 யூன் 20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டதாகக் கொள்க.)

மேற்படி இரு சந்தர்ப்பங்களையும் LKAS 10 அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள் நியமத்திற்கு அமைவாக எவ்வாறு கணக்கிற் கொள்வீர் என்பதனை காரணங்களுடன் **கூறுக**. (05 புள்ளிகள்)

**1.4** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கம்பனியொன்றின் கடப்பாட்டினை **விபரிக்குக**. (05 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 02

**மார்ட்டின் PLC** கம்பனியின் 2013 மார்ச் 31, 2014 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுகளும், 2014 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டு களுக்கான முற்றடக்க வருமானக் கூற்றுக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**மார்ட்டின் PLC**
**நிதிநிலைக் கூற்றுக்கள்**

*(ரூ.'000)*

| | 2015 மார்ச் 31 திகதியில் | 2014 மார்ச் 31 திகதியில் | 2013 மார்ச் 31 திகதியில் |
|---|---|---|---|
| **சொத்துக்கள் :** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 45,000 | 35,000 | 40,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | |
| தொக்குகள் | 14,000 | 12,000 | 11,600 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 12,750 | 13,750 | 10,558 |
| காசும் காசுச் சமானங்களும் | 100 | 250 | 500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **71,850** | **61,000** | **62,658** |
| | | | |
| **உரிமையாள்மையும் பரிப்புக்களும்** | | | |
| **உரிமையாண்மை :** | | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 30,000 | 30,000 | 30,000 |
| கைக்கொள் வருமானம் | 19,249 | 9,771 | 5,000 |
| **மொத்த உரிமையாண்மை** | **49,249** | **39,771** | **35,000** |
| **பரிப்புக்கள் :** | | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | | |
| நீண்டகாலக் கடன்கள் | 10,716 | 8,329 | 16,700 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 11,885 | 12,900 | 10,958 |
| **மொத்தப் பரிப்புக்கள்** | **22,601** | **21,229** | **27,658** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **71,850** | **61,000** | **62,658** |

**மார்ட்டின் PLC**
**முற்றடக்க வருமானக் கூற்று**

(ரூ.'000)

| ஆண்டு முடிவு | 2015 மார்ச் 31 | 2014 மார்ச் 31 |
|---|---|---|
| விற்பனை | 148,000 | 110,000 |
| விற்பனைக் கிரயம் | (99,600) | (76,500) |
| **மொத்த இலாபம்** | **48,400** | **33,500** |
| தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (33,936) | (25,750) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | 14,464 | 7,750 |
| நிதிச் செலவுகள் | (2,133) | (1,582) |
| **வரிக்கு முன் இலாபம்** | **12,331** | **6,168** |
| வருமானவரிச் செலவுகள் | (2,853) | (1,397) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **9,478** | **4,771** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | - | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **9,478** | **4,771** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டுகளின்போது பங்கிலாபங்கள் வழங்கப்படவில்லை.

(2) சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(3) ஆண்டில் 365 நாட்களெனக் கொள்க.

**நீர் செய்ய வேண்டியது :**

2015 மார்ச் 31 மற்றும் 2014 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக**.

(a) மொத்த இலாப விகிதம்

(b) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE)

(c) சொத்துக்கள் புரள்வு விகிதம் (Assets Turnover Ratio)

(d) சராசரித் தொக்கு இருப்புக் காலம்

(e) சராசரி கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (10 புள்ளிகள்)

## வினா 03

(a) 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி **வ/ப டட்லி அன்ட் சன்ஸ் (தனி) கம்பனியானது கோகோ PLC** யிடமிருந்து நிதிக் குத்தகையின் கீழ் லொறி ஒன்றினைக் கொள்வனவு செய்தது. குத்தகை தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| லொறியின் சீர் மதிப்பு | ரூ.1,000,000/- |
| குத்தகைக் காலம் | 5 ஆண்டுகள் |
| குத்தகை வாடகை | ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் வருடாந்த குத்தகை வாடகை ரூ.280,854/- செலுத்தப்பட வேண்டும். |
| உள்ளார்ந்த (Implicit) வட்டி விகிதம் | 12.5% |
| 5 ஆண்டு முடிவில் ஒடிவுப் பெறுமதி | இல்லை. |
| லொறியின் மதிப்பிட்ட பயன்தரு ஆயுட்காலம் | 5 ஆண்டுகள் |

**நீர் செய்ய வேண்டியது :**

(i) மேற்படி குத்தகை ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்கான **வ/ப டட்லி அன்ட் சன்ஸ் (தனி) கம்பனியின்** ஏடுகளில் உரிய பேரேட்டுக் கணக்குகளைத் **தயாரிக்குக**.

(ii) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று மற்றும் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்புகளைக் **காட்டுக**. (06 புள்ளிகள்)

(b) LKAS 37 – ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்திற்கு அமைவாக ''ஆக்கபூர்வக் கடப்பாடு'' (Constructive Obligation) எனும் பதத்தினை ஒரு உதாரணத்துடன் **விபரிக்குக**. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) கீழே தரப்பட்டுள்ள மீதிகள் **வ.ப. சேயா கம்பனியின்** 2015 மார்ச் 31 ஆந் திகதியின்படியான நிதிநிலைக் கூற்றிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| அலுவலக உபகரணம் (கிரயத்தில்) | 461,000 |
| திரள் தேய்மானம் | (175,000) |
| **2015 மார்ச் 31 இல் நிகர ஏட்டுப் பெறுமதி** | **286,000** |

2015 யூன் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீடானது ரூ. 90,000/- கிரயத்தையும், 2015 மார்ச் 31 ஆந் திகதி ரூ. 67,500/- நிகர ஏட்டுப் பெறுமதியினையும் கொண்ட அலுவலக உபகரண உருப்படியொன்றின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 40,000/- எனக் காட்டியது. கம்பனியின் தேய்மானக் கொள்கையானது அலுவலக உபகரணங்களை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% தேய்மானம் செய்வதாகும்.

ஏனைய சகல அலுவலக உபகரண உருப்படிகளின் சீர் மதிப்புகள் அந்தத் திகதியில் அவற்றின் நிகர ஏட்டுப் பெறுமதிகளுக்கு சமனானவை எனக் கொள்க.

**நீர் செய்ய வேண்டியது :**

(i) பொதுத் தினக் குறிப்பேட்டில் 2015 யூன் 30 ந் திகதியில் மேற்படி மீள்மதிப்பீட்டினை கணக்கிற் கொள்வதற்குத் தேவையான பதிவுகளை **பதிவுசெய்க**.

(ii) 2015 யூன் 30 ஆந் திகதி மீள்மதிப்பீட்டினை கணக்கிற் கொண்ட பின்னர் அலுவலக உபகரணத்தின் நிகர ஏட்டுப் பெறுமதியினைக் **கணிக்குக**. (06 புள்ளிகள்)

(b) LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமம் தொடர்பில் முன்னோக்கிய பிரயோகம் (Prospective Application) மற்றும் முன்பிருந்தான பிரயோகம் (Retrospective Application) எனும் பதங்களை **வேறுபடுத்துக**.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவுற்றது*

## பகுதி C

ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட மைக்ரோ கம்பனியானது** கொழும்பு பங்குப் பரிமாற்று நிலையத்தில் நிரற் படுத்தப்பட்ட கம்பனியாகும். 2015 மார்ச் 31 ஆந் திகதி கம்பனியின் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**வரையறுக்கப்பட்ட மைக்ரோ கம்பனி**
**2015 மார்ச் 31 ஆந் திகதிய பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - (2 மில்லியன் சாதாரண பங்குகள்) | | 23,100 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் (100,000 பங்குகள்) | | 9,000 |
| 16% தனிச்சங்கள் | | 3,500 |
| கைக்கொள் இலாபம் (2014 மார்ச் 01 இல்) | | 725 |
| <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்</u> | | |
| காணி | 16,800 | |
| கட்டிடம் | 11,300 | |
| கட்டிடம் - புத்துருவாகும் வேலை (WIP) | 1,300 | |
| மோட்டார் வாகனங்கள் | 9,250 | |
| அலுவலக உபகரணம் | 2,640 | |
| தளபாட, இணைப்புகள் | 2,200 | |
| <u>தேய்மான ஏற்பாடு – 2014 ஏப்ரல் 01 இல்</u> | | |
| கட்டிடம் | | 8,475 |
| மோட்டார் வாகனங்கள் | | 4,550 |
| அலுவலக உபகரணம் | | 1,584 |
| தளபாட, இணைப்புகள் | | 1,100 |
| தொக்குகள் - கிரயத்தில் (2015 மார்ச் 31) | 7,550 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 22,450 | 17,571 |
| வரிமதிப்பாண்டு 2013/14 க்கான வரிப் பரிப்பு | | 400 |
| அட்டுறு செலவுகள் | | 434 |
| வங்கிக் கடன் | | 2,367 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 1,081 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 70,015 | 105,500 |
| செலுத்தப்பட்ட முன்னுரிமைப் பங்கிலாபம் | 50 | |
| நிருவாகச் செலவுகள் | 15,950 | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 13,350 | |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 3,375 | |
| நிதிச் செலவுகள் | 220 | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 775 | |
| | **178,306** | **178,306** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) கம்பனியானது எல்லாத் தனிச்சங்களையும் 2015 மார்ச் 31 ஆந் திகதியில் 5% வட்டத்தில் (premium) மீட்டது. அதே தினத்தில் கம்பனி அட்டுறுவாகியிருந்த வட்டியையும் செலுத்தியது. இந்த மீட்குகை காரணமாக செலுத்தப்பட்ட முழுத் தொகையும் தவறுதலாக வியாபார சென்மதிக் கணக்கில் பதிவு செய்யப்பட்டது.

(2) 2014 செப்ரெம்பர் 30 ஆந் திகதி கம்பனி அதன் பழைய லொறியொன்றினை பரிமாற்றாகக் கொடுத்து புதிய லொறியொன்றைக் கொள்வனவு செய்தது. பழைய லொறியின் கிரயம் ரூ. 950,000/-. அது 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டது. பரிமாற்றுத் தொடர்பாக எஞ்சிய தொகையாக ரூ. 800,000/- இனை கம்பனி செலுத்தியதுடன் இந்தத் தொகையை மோட்டார் வாகனக் கணக்கில் வரவுப் பதிவு செய்திருந்தது. புதிய லொறியின் சீர் மதிப்பு ரூ.1,250,000/- ஆகும். இது தொடர்பாக வேறெந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

(3) கம்பனி கீழ்வரும் சொத்துக்களை ஆண்டின்போது கொள்வனவு செய்தது :

| திகதி | சொத்து | பெறுமதி, ரூ. |
|---|---|---|
| 2014.05.01 | துருவல் (Scanning) எந்திரம் | 900,000 |
| 2015.01.01 | புத்தக அடுக்குகள் | 160,000 |

(4) தேய்மானம் நேர்கோட்டு முறையில் கிரயம் அல்லது மீள்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரண பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 5 ஆண்டுகள் |
| தளபாட, இணைப்புகள் | : | 10 ஆண்டுகள் |

கட்டிடம் - புத்துருவாகும் வேலைக்கு தேய்மான ஏற்பாடு செய்யப்படுவதில்லை.

(5) ஆண்டின் இறுதியில் வியாபார வருமதிகள் மீதியான ரூ. 117,000/- அறவிடப்பட முடியாதென உறுதிப்படுத்தப்பட்டது. ஐயுறவுக் கடன்களுக்கான பொது ஏற்பாடாக ரூ.345,000/- செம்மை யாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

(6) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் கீழ்வரும் அட்டுறு செலவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் :

| | ரூ. |
|---|---|
| கணக்காய்வு மற்றும் ஏனைய தொழில்சார் கட்டணங்கள் | 255,000 |
| தொலைபேசி, நீர் மற்றும் மின் கட்டணங்கள் | 17,000 |

(7) நிலுவையிலுள்ள வங்கிக்கடன் மீதியில் ரூ. 800,000/- அடுத்த ஆண்டில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

(8) 2015 மார்ச் 31 ஆந் திகதி தொக்குகளின் நிகர தேறுகைப் பெறுமதி ரூ.7,300,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(9) வரிமதிப்பாண்டு 2013/14 க்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 350,000/- ஆக இணங்கப்பட்டு வரிமதிப்பாண்டு 2014/15 இன்போது செலுத்தப்பட்டது. வரிமதிப் பாண்டு 2014/15 க்கான கம்பனியின் வரிப் பரிப்பு ரூ. 510,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(10) கம்பனியின் பணிப்பாளர் சபையானது 2015 மே 15 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2015 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த சாதாரண பங்குகளுக்கு, பங்கொன்றிற்கு சதம் 50 வீதம் பங்கிலாபம் செலுத்தத் தீர்மானித்தது.

(11) நிதிக் கூற்றுக்கள் வழங்கலுக்காக 2015 யூன் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீர் செய்ய வேண்டியது :**

பிரசுரிப்புக்குப் பொருத்தமான வகையில் **வ/ப மைக்ரோ கம்பனியின்** கீழ்வருவன வற்றைத் **தயாரிக்குக** :

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (09 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(c) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று (04 புள்ளிகள்)

(d) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான குறிப்பு (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 06

(a) LKAS 27 ஒன்றித்த மற்றும் வேறான நிதிக் கூற்றுக்கள் எனும் நியமத்தின்படி கீழ்வரும் பதங்களை பொருள் வரையறை செய்க.

(i) ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

(ii) கட்டுப்பாடற்றோர் நாட்டம்

(iii) கட்டுப்பாடு (Control) (04 புள்ளிகள்)

(b) 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி பீட்டா PLC யின் கைக்கொள் இலாப மீதி ரூ. 1,400,000/- ஆக இருந்தபோது அல்பா PLC ஆனது பீட்டா PLC யின் 75% சாதாரணப் பங்கு மூலதனத்தைக் கொள்வனவு செய்தது. இந்தக் கொள்வனவுத் திகதியில் பீட்டா PLC யின் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு ரூ. 6,100,000/- ஆக இருந்தது.

இந்த நிகரச் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதிக்கும் சீர் மதிப்பிற்கும் இடையிலான வித்தியாசம் மோட்டார் வாகனப் பெறுமதி அதிகரிப்பால் ஏற்பட்டதாகக் கொள்க. மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% விகிதத்தில் தேய்மானம் செய்யப்படுகின்றது.

இந்த இரு கம்பனிகளினதும் 2015 மார்ச் 31 ஆந் திகதியின்படியான நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**நிதிநிலைக் கூற்று**
**2015 மார்ச் 31 இல** *(ரூ.'000)*

| | அல்பா PLC | பீட்டா PLC |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 14,500 | 2,845 |
| **பீட்டா PLC** யில் முதலீடு | 5,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 6,300 | 3,950 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 3,540 | 1,590 |
| காசும் காசுச் சமானங்களும் | 450 | 260 |
| | **29,790** | **8,645** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **பங்கு மூலதனமும் ஒதுக்கங்களும் :** | | |
| குறிப்பிடு மூலதனம் (சாதாரண பங்கு மூலதனம்) | 20,000 | 4,000 |
| கைக்கொள் இலாபம் | 2,375 | 1,700 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | 1,500 | 950 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 5,640 | 1,635 |
| அட்டுறு செலவுகள் | 275 | 360 |
| | **29,790** | **8,645** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியில் **பீட்டா PLC** யின் வழங்கப்பட்டு முற்றிலுமாகச் செலுத்தப்பட்ட 400,000 பங்குகள் இருந்ததுடன், அந்தத் திகதியின் பின்னர் புதிய வழங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 2013 ஏப்ரல் 01 இல் இந்தப் பங்குகளின் சந்தைப் பெறுமதி பங்கொன்று ரூ. 15/- ஆக இருந்தது. அல்பா PLC அதன் உபகம்பனிகளை ஒன்றித்தலில் முழு நன்மதிப்பு முறையினைக் கடைப்பிடிக்கின்றது.

(2) **அல்பா PLC** பொருட்களை **பீட்டா PLC** க்கு கிரயத்தில் 25% இலாபம் வைத்து விற்பனை செய்கிறது. 2015 மார்ச் 31 ஆந் திகதியில் **பீட்டா PLC** யின் தொக்குகள் **அல்பா PLC** யிடமிருந்து கொள்வனவு செய்த ரூ. 440,000/- பெறுமதியான பொருட்களை உட்படுத்தி யிருந்தது.

(3) 2015 மார்ச் 30 ஆந் திகதி **பீட்டா PLC** ரூ. 350,000/- இனை கொள்வனவு செய்த பொருட்களின் நிலுவைத் தொகையினை தீர்க்குமுகமாக **அல்பா PLC** க்கு அனுப்பி வைத்தது. இந்தத் தொகையினை **அல்பா PLC** 2015 ஏப்ரல் 04 ஆந் திகதி பெற்றுக் கொண்டு அந்தத் திகதியிலேயே கணக்கு வைத்தது.

(4) 2015 மார்ச் 31 ஆந் திகதி மேற்கொண்ட சேத இழப்புச் சோதனை ஒன்றித்தல் மீதான நன்மதிப்பு ரூ. 150,000/- இனால் சேத இழப்பு அடைந்துள்ளமையைக் காட்டியது.

**நீர் செய்ய வேண்டியது :**

(i) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பினைக் **கணிக்குக**.

(ii) ஒன்றித்த கைக்கொள் வருமானக் கணக்கினைத் **தயாரிக்குக**.

(iii) கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக் கணக்கினைத் **தயாரிக்குக**.

(iv) 2015 மார்ச் 31 ஆந் திகதி ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக**. (19 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட ப்ரான்ட் ஹவுஸ் கம்பனியின்** 2014 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களும் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட ப்ரான்ட் ஹவுஸ் கம்பனி**
**நிதிநிலைக் கூற்றுக்கள்**

*(ரூ.'000)*

| | **2015 மார்ச் 31 திகதியில்** | | **2014 மார்ச் 31 திகதியில்** | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | | |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:** | | | | |
| காணி | | 6,500 | | 6,500 |
| கட்டிடம் | 2,215 | | 2,215 | |
| கழி: திரள் தேய்மானம் | (1,550) | 665 | (1,440) | 775 |
| மோட்டார் வாகனங்கள் | 2,750 | | 1,500 | |
| கழி: திரள் தேய்மானம் | (1,812) | 938 | (1,125) | 375 |
| அலுவலக உபகரணம் | 695 | | 855 | |
| கழி: திரள் தேய்மானம் | (560) | 135 | (513) | 342 |
| | | 8,238 | | 7,992 |
| முதலீடுகள் | | 1,600 | | 1,600 |
| கழி: சேத இழப்பு ஏற்பாடு | | (100) | | - |
| | | **9,738** | | **9,592** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | | |
| தொக்குகள் | | 510 | | 455 |
| வியாபார வருமதிகள் | | 2,750 | | 2,890 |
| வருமதியாகவுள்ள முதலீட்டு வருமானம் | | 18 | | 25 |
| காசும் காசுச் சமானங்களும் | | 67 | | 55 |
| | | **3,345** | | **3,425** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **13,083** | | **13,017** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | | | |
| **உரிமையாண்மை :** | | | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்கு மூலதனம் | | 7,000 | | 7,000 |
| கைக்கொள் இலாபம் | | 1,792 | | 635 |
| | | **8,792** | | **7,635** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | | | |
| 15% தனிச்சங்கள் | - | | 2,500 | |
| வங்கிக் கடன் | 1,120 | | 1,620 | |
| ஓய்வுப் பயன் கடப்பாடு | 600 | 1,720 | 550 | 4,670 |
| | | **10,512** | | **12,305** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | | |
| வியாபார சென்மதிகள் | | 2,442 | | 594 |
| அட்டுறு செலவுகள் | | 55 | | 45 |
| சென்மதியாகவுள்ள வருமான வரி | | 48 | | 35 |
| செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கடன் | | 26 | | 38 |
| | | **2,571** | | **712** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **13,083** | | **13,017** |

**வ/ப ப்ரான்ட் ஹவுஸ்**
**2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்று**

*(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| விற்பனை | | 18,600 |
| விற்பனைக் கிரயம் | | (8,800) |
| **மொத்த இலாபம்** | | **9,800** |
| **ஏனைய வருமானம் :** | | |
| முதலீட்டு வருமானம் | 175 | |
| அலுவலக உபகரண விற்பனை மீதான இலாபம் | 60 | 235 |
| | | 10,035 |
| **கழி : செலவுகள்** | | |
| விநியோகச் செலவுகள் | 4,670 | |
| நிருவாகச் செலவுகள் | 3,210 | |
| நிதிச் செலவுகள் | 488 | (8,368) |
| **வரிக்கு முன் இலாபம்** | | **1,667** |
| வருமான வரிச் செலவுகள் | | (510) |
| **வரிக்குப் பின் இலாபம்** | | **1,157** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | | **1,157** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2015 மார்ச் 31 இல் கம்பனி அதன் தனிச்சங்கள் முழுவதையும் மீட்டது.

(2) நிதிச் செலவுகள் வங்கிக் கடன் வட்டி மற்றும் தனிச்ச வட்டிகளைக் கொண்டதாகும்.

(3) 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூ. 160,000/- க்கு கொள்வனவு செய்த அலுவலக உபகரணம் ஒன்று 2014 செப்ரெம்பர் 30 ஆந் திகதி விற்கப்பட்டது. கம்பனி அலுவலக உபகரணங்களை நேர்கோட்டு முறையில் 5 ஆண்டுகளில் தேய்மானம் செய்கின்றது.

(4) இந்த ஆண்டின்போது கம்பனி புதிய லொறியொன்றைக் கொள்வனவு செய்தது.

(5) நடப்பு ஆண்டிற்கான தேய்மான அறவீடு ரூ. 956,000/-.

(6) ஆண்டின்போது முதலீட்டின் சந்தைப் பெறுமதி ரூ. 100,000/- இனால் குறைவடைந் துள்ளமையை கம்பனி இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் அந்த சேத இழப்பிற்கு உரிய செம்மையாக்கங்களை மேற்கொண்டது.

(7) ஆண்டின்போது கம்பனி ரூ. 200,000/- இனை பணிக்கொடை ஏற்பாடாக ஏற்பாடு செய்தது.

**நீர் செய்ய வேண்டியது :**

நேரில் முறையினை உபயோகித்து **வ/ப ப்ரான்ட் ஹவுஸ் கம்பனியின்** 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்றினைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

*பகுதி C முடிவடைந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01<br>கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02<br>பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03<br>பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |